**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.221/2016**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : மணிசேகரன் | **Caste** | : | |
| **Father's Name** | : நாகநேயகவுண்டர் | **Calling** | : | மெடிக்கல் |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **51** |
| | | **Dated** | : | **08.08.2025** |

**08.08.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) தாக்கல் செய்துள்ள மனு, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் உள்ள விவரங்கள் நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் பணம் ஏதும் வாங்கவில்லை அதனால் தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரி எவ்வாறு எனக்கு பழக்கம் என்று புகாரிலும் அறிவிப்பிலும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் என்ன வியாபாரம் செய்கிறேன் என்று புகாரிலும் அறிவிப்பிலும்

குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல மருந்து வியாபாரம் செய்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன். நான் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது காசோலையை தவிர எந்த ஆவணமும் பெறவில்லை என்றால் சரிதான். நான் பணம் கொடுக்கும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை நானும் எதிரியும் தான் இருந்தோம். பணத்தை என்னுடைய வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். எனக்கு மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் ரூ.30000 வரும். மாத வருமானம் எனது வங்கி மூலமாகத்தான் பணப்பரிவர்தனை செய்யப்படும். என்னுடைய வங்கி statement ஐ எடுத்துப் பார்த்தால் மேற்சொன்ன விபரங்கள் அத்தனையும் வரும். நான் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு தகுதியுண்டு என்பதற்கு எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) திண்டுக்கல் தென்னம்பட்டியைச் சேர்ந்த தொட்டியகவுண்டர் மகன் சுப்பையாவை தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபரிடம் நானும் எதிரியும் மாத சீட்டு கட்டி வந்தோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நானும் சுப்பையாவும் நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். நான் சொல்வது போல் நானும் எதிரியும் சுப்பையாவிடம் மாத சீட்டு கட்டிவந்தோம் என்றாலும் எதிரி அவரது சீட்டை எடுக்கும்போது ஆதரவாக சுப்பையாவுக்கு கொடுத்த காசோலையை வைத்து நான் தவறாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனக்கு சட்டப்படியான பணம் ஏதும் எதிரி எனக்கு தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் காசோலையில் எதிரியின் கையொப்பத்தை தவிர மற்ற விவரங்கள் அனைத்தும் வேறு மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி தான் எழுதினார். திண்டுக்கல்லைச் சேர்ந்த ராபர்ட் மற்றும் முகமது யாசினும் சேர்ந்து சுப்பையாவிடம் மாதச் சீட்டு தவணை கட்டி வந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபர்களை எதிரிகள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

3) நான் சொல்வது போல் காசோலையில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் தான் நிரப்பினேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையொப்பம் கலெக்சன் சலானில் உள்ள கையொப்பமும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்றால் சரிதான். இவ்வழக்கின் உண்மை தன்மை தெரிய வேண்டுமென்றால் சுப்பையாவை விசாரித்தால் தெரியும் அவரை எதிரி தரப்பில் விசாரிக்க ஆட்சேபணை இல்லை என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த வித பணமும் என்னிடம் கடனாக பெறவில்லை என்றாலும் காசோலை ஏதும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி கடன் வாங்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சுப்பையா எனது உறவினர் என்பதால்

அவருக்கு கொடுத்த காசோலையை நான் தவறாக இவ்வழக்கில் எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.08.11 19:57:23 +0530

Judicial Magistrate No.II
Dindigul.